Ph : 0431 - 2461415

# திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்

2, லாசன்ஸ் ரோடு, கண்டோன்மெண்ட்,
திருச்சிராப்பள்ளி - 620 001




# தோற்றமும் வளர்ச்சியும்

Rs. 15/-

✆ 0431 - 2461415

# திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்

2, லாசன்ஸ் ரோடு, கண்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி - 620 001

## முன்னுரை

இறையன்புடையீர், வணக்கம்.

திருச்சிராப்பள்ளி நகருக்குச் சிறப்புகள் பல உண்டு. அகண்ட காவிரியும், அற்புதமானத் திருத்தலங்களும் அன்பர்கள் நினைவுக்கு இயல்பாக வரும்.

"திரிச்சிராப்பள்ளி யென்றலும் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே" என்பது நாவுக்கரசர் தேவாரம்.

108 வைணவ திவ்ய தேசங்களில் முதல் தலமான திருவரங்கம், பஞ்சபூதத் தலங்களில் அப்புத் தலமான திருவானைக்கா, உச்சிப் பிள்ளையார், தாயுமானவர், திருப்புகழ் திருத்தலமாகிய வயலூர் முருகன், சக்தி தலங்களில் ஒன்றான சமயபுரம் மாரியம்மன், உத்தமர்கோயில் ஆகிய தலங்களுக்குச் சென்று வழிபடும் அன்பர்கள் நமது ஐயப்பன் கோவிலுக்கும் தவறாமல் வருகை தருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கத்தினரால் பராமரிக்கப்படும் இக்கோயில் பற்றிய முழுமையான கையேடு இருப்பின் உதவியாக இருக்கும் என அன்பர்கள் பலர் விழைந்ததன் காரணமாக, அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் **" ஸ்ரீ ஐயப்ப சங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்"** என்ற தலைப்பில் இச்சிறு கையேடு பகவான் ஸ்ரீ ஐயப்பனின் 4வது கும்பாபிஷேகத்தன்று வெளியிடப்படுகின்றது.

அன்பர்கள் படித்துப் பயன் பெறுவார்கள் என நம்புகிறோம்.

இப்புத்தகம் தயாரிப்பதற்கு உறுதுணையாக இருந்த பேராசிரியர் V.S. ராஜா அவர்களுக்கு நன்றி.

*சுவாமி சரணம்*

**ஸ்ரீ ஐயப்ப சங்கம்**

15.12.2014

திருச்சிராப்பள்ளி

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| **1.0** | **ஸ்ரீ ஐயப்ப சங்கத்தின் தோற்றம்** | 1 |
| **2.0** | **சங்கத்தின் செயல்பாடுகள்** | 1 |
| 2.1 | ஸ்ரீ ஐயப்பன் கோயில் | 2 |
| 2.2 | பாலர் பள்ளி | 9 |
| 2.3 | தேவாரம் – திருவாசகம் வகுப்புகள் | 9 |
| 2.4 | யோகா வகுப்புகள் | 10 |
| 2.5 | இரத்த தானம் | 10 |
| 2.6 | அன்னதானம் மற்றும் நீர்மோர் தானம் | 10 |
| 2.7 | கல்வி தானம் | 11 |
| 2.8 | புத்தக நிலையம் | 12 |
| 2.9 | மூலிகை வனம் | 12 |
| 2.10 | உழவாரப்பணி | 12 |
| **3.0** | **சங்கத்தின் இதர சேவைகள்** | 13 |
| **4.0** | **நோக்கங்கள் பத்து** | 15 |
| **5.0** | **நிறைவுரை** | 15 |
| **6.0** | **சங்கத்தின் சமூகப் பணிகளின் தொகுப்பு** | 16 |
| **7.0** | **சங்கம் பற்றிய விவரங்களின் தொகுப்பு** | 17 |
| 8.0 | KEY PLAN | 18 |

# திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்

## தோற்றமும் வளர்ச்சியும்

### 1.0 ஸ்ரீ ஐயப்ப சங்கத்தின் தோற்றம்

ஸ்ரீ ஐயப்ப சங்கம் 1977 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு சமுதாய சட்டத்தின் கீழ் ( பதிவு எண். 56 / 1977 ) பதிவு செய்யப்பட்ட அமைப்பு ஆகும். 1978 மற்றும் 1979 ஆம் ஆண்டு, அய்யம்பாளையம் பண்ணையிடமிருந்து இடம் வாங்கப்பட்டது. சங்கத்திற்குரிய விதிமுறைகள் அடிப்படையில் நிர்வாகக்குழு அமைக்கப்பட்டு பல்வேறு செயல்பாடுகள் நடைபெறுகின்றன.

### 2.0 சங்கத்தின் செயல்பாடுகள்

2.1 ஸ்ரீ ஐயப்பன் கோயில்

2.2 பாலர் பள்ளி

2.3 தேவாரம் – திருவாசகம் வகுப்புகள்

2.4 யோகா வகுப்புகள்

2.5 இரத்த தானம்

2.6 அன்ன தானம் மற்றும் நீர்மோர் தானம்

2.7 கல்வி தானம்

2.8 புத்தக நிலையம்

2.9 மூலிகை வனம்

2.10 உழவாரப்பணி

## 2.1 ஸ்ரீ ஐயப்பன் கோயில்

### 2.1.1 ஸ்ரீ சக்தி விநாயகர்

இந்த வளாகத்தில் ஏற்கனவே அமையப் பெற்றுள்ள ஸ்ரீ சக்தி விநாயகர் சந்நிதி, 1962 ஆம் ஆண்டு ஜுன் 21ஆம் நாள் காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. *'இந்த இடத்தில் பெரிய ஆலயம் ஒன்று அமையும்'* என்று சுவாமிகள் அன்றைக்கே திருவுளம் பற்றியிருப்பார் போலும். இதே எண்ணம் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த நல்ல உள்ளம் படைத்த பல அன்பர்கள் மனதில் அருள்வாக்காகப் பதிந்து இன்று நாம் காண்கின்ற இந்த அற்புதமான ஸ்ரீ ஐயப்பன் ஆலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

### 2.1.2 கோயில் அமைப்பு

சபரிமலை பிரம்மஸ்ரீ கண்டரு மஹேஸ்வரரு தந்திரி அவர்களால் சிலா ஸ்தாபனம் செய்யப்பட்டு, முதல் கும்பாபிஷேகம் 27.06.1985 அன்றும், இரண்டாவது கும்பாபிஷேகம் 13.12.1995 அன்றும், மூன்றாவது கும்பாபிஷேகம் 09.12.2004 அன்றும், நான்காவது கும்பாபிஷேகம் 15.12.2014 அன்றும் நடைபெற்றன.

ஸ்ரீ ஐயப்பன் சந்நிதானம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. 50 அடிகள் உயரம் கொண்ட துவஜஸ்தம்பம் கம்பீரத் தோற்றத்துடன் அமைந்துள்ளது. துவஜஸ்தம்பத்தை அடுத்து அழகாக மணிமண்டபம் அமைந்துள்ளது. இதை அடுத்து மூலஸ்தானத்தில் சின் முத்திரை காட்டி, "கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்போடு" பகவான் ஸ்ரீ ஐயப்பன் அருள்பாலித்த வண்ணம் காட்சியளிக்கிறார். பூஜைகள், கேரள முறைப்படி தாந்தீரிய முறையில் செய்யப் படுகின்றன.

மூலஸ்தானத்தின் வலதுபுறம் கன்னிமூலை கணபதி தனிச்சந்நிதியில் அருள்பாலிக்கிறார். சந்நிதானத்திற்கு நேர் பின்புறம் நாகராஜாவும், இடதுபுறம் ஸ்ரீ பகவதி அம்மனும் பிரசன்னமாகி இருக்கிறார்கள்.

அடுத்தாற்போல் நவக்கிரஹங்களின் சந்நிதானம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான அன்பர்கள் அமர்ந்து தியானம் செய்யும் வகையில் தியான மண்டபம் அமைந்துள்ளது.

எல்லா பூஜை நேரங்களிலும் மங்கள வாத்தியங்கள் இசைக்கப் படுகின்றன.

சக்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகே உள்ள அரசமரம் தலவிருட்சமாக கொள்ளப்பட்டுள்ளது.

கோயிலின் முக்கிய நோக்கங்கள் இரண்டு : தூய்மையும் அமைதியும்.

**2.1.3 ஸ்ரீ ஐயப்பன் கோயிலின் பொதுவான பூஜை நேரங்கள் :**

| காலை | | மாலை | |
|---|---|---|---|
| 05.00 | நடை திறத்தல் | 05.00 | நடை திறத்தல் |
| 05.30 | கணபதி ஹோமம் | 06.30 | மாலை பூஜை, தீபாராதனை |
| 06.30 | அபிஷேகம் | 07.40 | இரவு பூஜை, சீவேலி |
| 07.30 | உஷத் பூஜை, சீவேலி | 08.40 | ஹரிவராஸனம் |
| | | 08.45 | நடை சாத்துதல் * |
| 10.30 | உச்ச பூஜை | * குறிப்பு : கார்த்திகை மண்டல பூஜை சமயத்தில் இரவு 9.40 மணிக்கு நடை சாத்தப்படுகின்றது. | |
| 11.00 | நடை சாத்துதல் | | |

**2.1.4 பொதுவான பூஜை வழிபாடு :**

கீழ்க்கண்ட பூஜைகள் தினமும் நடைபெறுகின்றன.

- ○ கணபதி ஹோமம்
- ○ அபிஷேகம்
- ○ சகஸ்ரநாம அர்ச்சனை
- ○ கோமாதா பூஜை
- ○ நவக்கிரஹ ஹோமம் (அபிஷேகம் – சனிக்கிழமை)

கீழ்க்கண்ட பூஜைகள் குறிப்பிட்ட நாட்களில் நடைபெறுகின்றன.

- ○ ராகுகால பூஜை (வெள்ளிக்கிழமை மட்டும்)
- ○ பகவதி பூஜை (வெள்ளிக்கிழமை மட்டும்)
- ○ நீராஞ்சனம் (சனிக்கிழமை மட்டும்)

**2.1.5 சிறப்பு பூஜைகள்**

***2.1.5.1 நாகராஜா பூஜை***

ஒவ்வொரு ஆயில்ய நட்சத்திர தினத்தில் காலை 8.15 மணியளவில் இந்தப் பூஜை நடைபெறுகின்றது. வயது மிக அதிகமாகியும், திருமணம் ஆகாமல் இருப்பவர்களுக்காகவும், திருமணம் ஆகி பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களின் குறையைப் போக்குவதற்கும், மேலும் ஜாதகத்தில் நாகதோஷம் உள்ளவர் களுக்காகவும் இந்த பூஜை நடைபெறுகிறது. இதில் அன்பர்கள் பலர் பங்கு பெற்று இறையருளால் குறைகள் நீங்கப் பெறுகிறார்கள்.

***2.1.5.2 மஹாலட்சுமி பூஜை :***

ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் இரவு 7.00 மணியளவில் இந்தப் பூஜை நடைபெறுகிறது. குடும்பத்தில் சௌபாக்கியம் கிடைப்பதற்காகவும், நாட்டின் சுபிட்சத்திற்காகவும் நடத்தப்படும் இந்தப் பூஜையில் நூற்றுக் கணக்கான அன்பர்கள் கலந்து கொண்டு பிரசாதம் பெற்றுச் செல்கின்றனர்.

**2.1.6 நட்சத்திர அர்ச்சனை, நவக்கிரஹ அர்ச்சனை:**

அன்பர்கள் விரும்பும் நட்சத்திர தினத்தில் பகவான் ஸ்ரீ ஐயப்பனுக்கு அர்ச்சனை செய்யப்பட்டு பிரசாதத்தை அவ்வப்போது தபால் மூலம் (உள்நாடு + வெளிநாடு) அனுப்பும் ஏற்பாடு நடைமுறையில் உள்ளது. இதேபோல் நவக்கிரகங்களுக்கு 9 வாரங்கள் தொடர்ந்து அர்ச்சனை செய்து பிரசாதங்களை அவ்வப்போது தபாலில் அனுப்பும் வழக்கமும் உள்ளது.

**2.1.7 முழுநாள் பூஜை :**

அன்பர்கள் விரும்பும் ஆங்கிலத் தேதியில் ( தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தாண்டு நீங்கலாக) ஒருநாள் பூஜை அவர்கள் பெயரில் செய்யப்பட்டு பிரசாதம் வழங்குவதற்கு உரிய ஏற்பாடு நடைமுறையில் உள்ளது. அம்மா, அப்பாவின் நினைவாக பல அன்பர்கள் இப்பூஜையில் பங்கு பெறுகின்றனர்.

**2.1.8 ரத பவனி, பல்லக்கு பவனி மற்றும் புஷ்பாபிஷேகம் :**

ஒவ்வொரு உத்திர நட்சத்திரத்தன்றும், அன்பர்கள் உபயம் ஏற்றுக்கொள்ளும் நாட்களிலும் பகவான் ஸ்ரீ ஐயப்பனின் ரதபவனி நடைபெறுகின்றது. நான்கு பேர் தூக்கும் பல்லக்குப் பவனியும் நடைபெறுகின்றது. மேலும் அன்பர்கள் விரும்பும் தினங்களில் புஷ்பாபிஷேகம் செய்யும் ஏற்பாடும் நடைமுறையில் உள்ளது.

**2.1.9 பிரம்மோத்ஸவம் :**

பகவான் ஸ்ரீ ஐயப்பனுக்கு பிரம்மோத்ஸவ பூஜை வழிபாடுகள் மண்டல பூஜையின் போது 6 நாட்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. கார்த்திகை மாத உத்திர நட்சத்திர தினத்தன்று சுமார் 16,000 அன்பர்கள் பங்கு பெறும் மகா அன்னதானம் நடைபெறுகின்றது. அன்று மாலை கொடியேற்றப்பட்டு பிரம்மோத்ஸவ விழா துவங்குகின்றது. 5-ஆம் நாள் இரவு பள்ளி வேட்டையும், நிறைவு நாளன்று காவிரியில் ஆராட்டும்,

பிறகு கொடியிறக்கமும் முறையாக நடைபெறுகின்றன. பிரம்மோத்ஸவ பூஜையின் போது வலம்புரிச் சங்காபிஷேகம் கடந்த 16 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெறுகின்றது. இப்பூஜைகள் அனைத்தும் சபரிமலை தந்திரி கண்டரு மஹேஸ்வரரு, அவரது குமாரர் தந்திரி கண்டரு மோகனரு அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெறுகின்றன. மண்டல பூஜை நாட்களில் இதிகாசங்கள், புராணங்கள் பற்றி உபந்நியாசங்கள், சொற்பொழிவுகள், கதாகாலட்ஷேபங்கள் போன்றவை நடத்தப்படுகின்றன.

### 2.1.10 மாலை போடுதல் மற்றும் இருமுடி கட்டுதல்

சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள் தவறாமல் 41 நாட்கள் முறையாக விரதம் கடைப்பிடிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. அத்தகைய அன்பர்களுக்கு மட்டுமே மாலை போடுவதற்கும் இருமுடி கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. கடைப்பிடிக்க வேண்டிய விரதநெறிமுறைகள் பற்றிய விவரங்கள் கல்வெட்டில் பொறிக்கப் பட்டுள்ளன.

### 2.1.11 அம்மா சந்நிதி

ஒவ்வொருவரும் தமது தாயை நினைத்து வணங்குவதற்கு ஏதுவாக ‘அம்மா’ சந்நிதி தனியே உள்ளது. தாயாருக்கு சிராத்தம் செய்யும் ஒரே தலமான மாத்ரு கயா (குஜராத்) பற்றிய தகவல் தரப்பட்டுள்ளது.

### 2.1.12 புனிதக் கற்கள் மேடை

1998ஆம் ஆண்டிலிருந்து 16 வருடங்களாக இந்த சங்கத்தின் மூலமாக ஆன்மிக யாத்திரை சென்று வந்த அன்பர்கள் வெவ்வேறு புனிதத் தலங்களிலிருந்து கொண்டு வந்த புனிதக் கற்கள் ( இதுவரை 1574 ) ஒரு சிறப்பான மேடையில் அன்பர்களின் பார்வைக்காகவும் தரிசனத்திற்காகவும் வைக்கப்பட்டுள்ளன.

கோடிக்கணக்கான பக்தர்கள் பாதம் பட்ட இக்கற்களை பொதுமக்கள் தரிசித்து, வலம் வந்து பேரானந்தமும் பெரு மகிழ்ச்சியும் அடைகின்றனர்.

இவை இசைக்குயில் திருமதி. M.S. சுப்புலட்சுமி அவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டு உள்ளது.

**2.1.13 கோயிலின் சிறப்புகள்**

- ❖ ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் சாதி, மத, நாடு பேதமின்றியும், எந்தப் பாகுபாடுமின்றியும், எவ்வித ஏற்றத் தாழ்வு இல்லாமலும் அனைவரும் சமமாக நடத்தப்படுகின்றனர்.
- ❖ வெளிநாட்டினரும் உள்ளே வந்து வழிபாடு செய்யவும், தியானம் செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- ❖ முறையான ஆடை அணிவது (Dress Code) வலியுறுத்தப் படுகின்றது.
- ❖ சுவாமியின் பெயரில் மட்டுமே புஷ்பாஞ்சலி அர்ச்சனை செய்யப்படுகிறது.
- ❖ பூஜை வழிபாடுகளில் வியாபார நோக்கம் இல்லை. கோயிலில் உண்டியல் இல்லை. தட்டில் காசு போடும் பழக்கமும் இல்லை. அர்ச்சனை செய்ய தட்சிணை இல்லை. கோயில் பணியாளர்கள் எந்தச் சன்மானமும் பெற்றுக் கொள்வதில்லை.
- ❖ கோயிலின் வரவு செலவுக் கணக்குகள் ஐயப்பன் சந்நிதானத்தில் தினந்தோறும் வாசிக்கப்படுகின்றன.
- ❖ கோயிலுக்கு வரும் அன்பர்கள் தாமாகவே முன் வந்து மிக அமைதியாக தரிசனம் செய்வது ஒரு அற்புதக் காட்சியாகும்.
- ❖ வரிசையை முறை செய்வதற்காக இங்கே சவுக்கு மரங்களையோ, இரும்புக் குழாய்களையோ உபயோகப்படுத்துவதில்லை.

ஒரு மெல்லிய நூல் மட்டுமே கட்டப்படுகின்றது. 50,000 பக்தர்கள் வந்தாலும் ஒரு ஒழுங்கிற்குக் கட்டுபட்டு நூல் அறுபடாமல் வரிசையில் வருதல் காணக்கிடைக்காத அரிய காட்சியாகும்.

❖ சங்க உறுப்பினர்களும், அலுவலகப் பொறுப்பில் உள்ளவர்களும், சேவையாளர்களும் தம்மை எதற்குமே முன்னிலைப்படுத்தாமல், வரிசையில் நின்றுதான் பிரசாதம் பெறும் வழக்கம் இங்கு நடைமுறையில் உள்ளது.

❖ ஸ்ரீ ஐயப்பன் சந்நிதியின் பின்புறம் ஒரு தபால் பெட்டி வைக்கப்பட்டு உள்ளது. அன்பர்கள் தங்களது பிரார்த்தனைக் கடிதங்களை இதில் சேர்ப்பிக்கலாம். ஒவ்வொரு மாதமும் சுவாமியின் ஜென்ம நட்சத்திர தினமான ‘உத்திரம்’ அன்று இக்கடிதங்கள் சுவாமியின் பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டு நியாயமான வேண்டுதல்கள் நிறைவேற சகஸ்ரநாம அர்ச்சனை செய்யப்படுகிறது. பின்பு, இக்கடிதங்கள் அனைத்தும் Paper Shredding Machine மூலம் அழிக்கப் படுகின்றன. அன்பர்களின் ஆத்மார்த்தமான வேண்டுதல் பற்றி ஐயனுக்கு மட்டுமே தெரியும். வேறு யாரும் படித்துப் பார்ப்பதில்லை. தெரியாமலும் அறியாமையினாலும் தாம் செய்த தவறுகளையும் பாவங்களையும் உணர்ந்து ஆத்மார்த்தமாக மன்னிப்பு கேட்டு, மன்னிப்பு கடிதம் சமர்ப்பிக்கும் பழக்கமும் அன்பர்களிடையே உண்டு. அப்படி செய்வதினால் அன்பர்கள் மனநிம்மதி பெறுகின்றனர்.

**2.1.14. வித்யாரம்பம்**

ஒவ்வொரு ஆண்டும் விஜயதசமி அன்று சிறுகுழந்தைகளுக்கு வித்யாரம்பம் செய்து வைக்கும் பழக்கம் நடைமுறையில் உள்ளது.

## 2.2 பாலர் பள்ளி

பாலர் பள்ளி 2007 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுகிறது. சின்னஞ்சிறுக் குழந்தைகளுக்கு அவர்கள் இசைக்கக்கூடிய அளவிற்கு தேவாரம், திருவாசகம், விநாயகர் அகவல், பகவத் கீதை, ஸ்லோகங்கள் போன்றவற்றை சொல்லித் தரவும், அவர்களை நெறிப்படுத்தும் நோக்கில் நீதிக்கதைகள், இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றை சொல்லித்தரவும், எளிய உடற்பயிற்சி செய்யவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. பாலர் பள்ளி வகுப்புகள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணி முதல் 10.30 மணிவரை நடைபெறுகின்றன. வகுப்புகளின் நிறைவில் பங்கேற்கும் குழந்தைகளுக்கு பிரசாதம், பால் ஆகியவை வழங்கப்படுகின்றன. இந்த பள்ளியில் சுமார் 200 குழந்தைகள் படிக்கின்றனர்.

### *2.2.1 மாதா பிதா பாத பூஜை*

ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரி நாளில் பாலர் பள்ளி மாணவர்கள் தங்கள் அம்மா அப்பாவிற்கு பாத பூஜை செய்யும் நிகழ்ச்சி வழக்கத்தில் உள்ளது.

## 2.3 தேவாரம் – திருவாசகம் வகுப்புகள்

தேவாரம் – திருவாசகம் வகுப்புகள் 2000 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன. இந்த இலவச இசைப்பயிற்சி வகுப்புகள் சனிக்கிழமைதோறும் இரவு 7.00 மணிமுதல் 8.00 மணி வரை நடைபெறுகின்றன. ஓதுவார் அவர்களால் நடத்தப்படும் இந்த பயிற்சியில் அன்பர்கள் பலரும் ஆர்வமுடன் கலந்து கொள்கிறார்கள்.

### 2.4 யோகா வகுப்புகள் :

1996 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வரும் இந்த வகுப்புகள் வருடத்திற்கு இரண்டு முறை (ஜனவரி – ஜூன் மற்றும் ஜூலை – டிசம்பர்) ஆடவர், பெண்டிருக்கு என தனித்தனியே செயல்பட்டு வருகின்றன. இவ்வகுப்புகள் ஒவ்வொரு ஞாயிறு அன்றும் காலையில் நடத்தப் படுகின்றன.

### 2.5 இரத்த தானம்

இரத்த தானம் 1996 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுகிறது. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது மற்றும் நான்காவது ஞாயிற்றுக் கிழமைகளில் இரத்ததான முகாம் சங்க வளாகத்தில் நடைபெற்று வருகிறது. பிற மதத்தைச் சேர்ந்தவர்களும் இரத்த தானத்தில் பங்கு பெறுகின்றனர். இச்செயல் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் பல விருதுகளைப் பெற்றதோடு பத்திரிக்கை வாயிலாகவும் பாராட்டு பெற்றுள்ளது. கார்த்திகை, மார்கழி மண்டல பூஜை சமயங்களில், மாலையிட்ட அன்பர்கள் நிறைய அளவில் இரத்த தானம் செய்வது ஒரு விசேஷ நிகழ்வாகும்.

இது தவிர கண் தானம், உடல்தானம், உறுப்பு தானம் செய்ய அன்பர்கள் ஊக்குவிக்கப் படுகின்றனர். இதற்கென தனித்தனியே உறுதிமொழிப் பத்திரங்கள் புத்தக நிலையம் மூலம் வழங்கப்படுகின்றன.

### 2.6 அன்ன தானம் & நீர்மோர் தானம்

பிரதி மாதம் உத்திர நட்சத்திர தினத்தன்றும், வாரத்தில் வெள்ளிக்கிழமை தோறும் கோயிலுக்கு வரும் சுமார் 2000 அன்பர்களுக்கு அன்னதானப் பிரசாதம் வழங்கப்படுகிறது. மனநலம் குன்றியவர்கள், மாற்றுத் திறனாளிகள், முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோருக்காக நடத்தப்படும் அமைப்பினருக்கு மாதந்தோறும் அரிசியும், உணவும் வழங்கப்பட்டு வருகின்றன.

கார்த்திகை மாதத்தில் வரும் உத்திர நட்சத்திர தினத்தன்று **மகா அன்னதானம்** நடைபெறுகிறது. இதில் சுமார் 16,000 அன்பர்கள் பங்கு கொள்கின்றனர்.

பிரதி ஆங்கில வருடப்பிறப்பு மற்றும் தமிழ் வருடப் பிறப்பன்றும் கோயிலுக்கு வரும் அன்பர்கள் அனைவருக்கும் லட்டுப் பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது.

நீர்மோர் தானம் 1991 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் கோடை வெயிலில் தவிக்கும் மக்களின் தாகத்தினைத் தணிக்கும் வகையில் நாள் ஒன்றுக்கு சுமார் ரூ. 6,000 செலவில் நீர்மோர் தானம் வழங்கப்பட்டு வருகிறது.

### 2.7 கல்வி தானம்

கல்வி தானம் 1994 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுகின்ற ஏழை எளிய மாணவர்கள் தொழிற்கல்வி படிப்பதற்கு உதவும் வகையில் கல்வி உதவித் திட்டம் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக அன்பர்கள் வழங்கும் உதவியானது நிரந்தர வைப்பு நிதியாக வைக்கப்பட்டு, அதிலிருந்து பெறப்படும் தொகை மாணவர்களின் கல்வி உதவித் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

கடந்த காலங்களில் கல்வி உதவி பெற்ற மாணாக்கர்கள் நன்கு படித்து வேலைக்குச் சென்ற பிறகு, நன்றி மறவாமல் மற்ற ஏழை மாணவர்களின் படிப்பிற்காக உதவி செய்யும் பெருந்தன்மை நெகிழ்ச்சியைத் தருவதாக உள்ளது.

## 2.8 புத்தக நிலையம்

பள்ளி மாணவர்களும் இளைஞர்களும் பயன்பெறும் வகையில், அவர்களை ஊக்குவிக்கும் சொற்றொடர்களும், ஆன்றோர்களின் சிந்தனைகளும் சுருக்கமாகத் தரப்பட்ட சிறு பிரசுரங்களும் ( Posters ) குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் காணப்படும் வாசகங்கள் அடங்கிய புத்தகமும் குறுந்தகடுகளும் இதே போல் பல பிரசுரங்களும் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் ஆன்மிகம் தொடர்பான பல புத்தகங்களும் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப் படுகின்றன.

## 2.9 மூலிகை வனம்

இங்கே நூற்றுக்கணக்கான துளசிச்செடிகளும், பலவகை மூலிகைச் செடிகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன. மேலும் நவக்கிரஹங்கள், 12 ராசிகள், 27 நட்சத்திரங்களுக்குரிய மரக்கன்றுகள், இறைவன் சாந்நித்தியத்திற்குரிய பத்து விருட்சங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த விருட்சங்களைத் தரிசித்து வலம் வந்து நடைப்பயிற்சி மேற்கொள்ளும் வகையில் நடைமேடை எட்டு வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலய வளாகத்தில் இன்றைய தேதியில் மொத்தம் 368 மரங்களும், 356 வகை மூலிகைச் செடிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 2.10 உழவாரப்பணி

உழவாரப்பணி டிசம்பர் 2012 முதல் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை நடைபெற்று வரும் உழவாரப் பணியில், அன்பர்கள் ஒவ்வொரு வாரமும் பெருமளவில் கலந்து கொண்டு கோயில் வளாகத்தைச் சுத்தம்

செய்கிறார்கள். கோயிலின் வளர்ச்சிக்குத் தன்னலம் கருதாமல் தொண்டு செய்கின்ற சேவையாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். தன்னலம் கருதா பொதுச்சேவையில் தன்னை ஆட்படுத்திக் கொள்ளும் ஒரு தொடர் பயிற்சிக்களமாகவும் இந்தக் கோயில் வளாகம் பயன்படுகிறது.

## 3.0 சங்கத்தின் இதர சேவைகள்

### 3.1 துளசித்தீர்த்தம்

ஆலயத்திற்கு வரும் அன்பர்கள் பருகுவதற்காக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் துளசி சேர்க்கப்பட்டு செப்புப் பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ளது.

### 3.2 இலவச மிதியடி மையம்

மிதியடி பாதுகாப்பு வசதி அன்பர்களுக்காக இலவசமாக செயல்பட்டு வருகிறது. இம்மையம் சேவையாளர்களால் பெரிதும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### 3.3 சாலை பராமரிப்பு

சங்க வளாகத்தை ஒட்டியுள்ள லாசன்ஸ் சாலை தினந்தோறும் சுத்தம் செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

### 3.4 வாரம் ஒரு நீதிக்கதை

வாழ்க்கையில் வெற்றி பெற எல்லோரும் பின்பற்ற வேண்டிய நெறி முறைகள் பற்றியும், பலருக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பு முனைச் சம்பவங்கள் பற்றியும் வாரந்தோறும் கதையாக அல்லது கட்டுரையாக கரும்பலகையில் எழுதப் படுகிறது. எல்லா வயதினரும் இதனை ஆர்வத்தோடு படித்துப் பயன்பெறுகின்றனர்.

### 3.5 ஆன்மிகத் தகவல்கள்

பிற கோயில்கள் பற்றி அரிய ஆன்மிகத் தகவல்கள் அன்பர்கள் பயன்பெறும் வகையில் கரும்பலகையில் வாரந்தோறும் எழுதப்படுகிறது.

### 3.6 ஆன்மிக யாத்திரை

இலாப நோக்கில்லாமல் அன்பர்கள் வசதியை மட்டுமே கருத்தில் கொண்டு, கடந்த 15 ஆண்டுகளாக காசி யாத்திரை, நட்சத்திரக் கோயில்கள் தரிசனம், திவ்ய தேச யாத்திரை, தேவாரத் திருத்தலங்கள் யாத்திரை போன்றவை சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

### 3.7 குளிக்கும் வசதி

மண்டல பூஜை காலத்தில் (கார்த்திகை, மார்கழி, தை) மாலை அணிந்து விரதம் இருக்கும் வெளியூர் அன்பர்கள் வசதிக்காக இலவசமாக குளிக்கும் வசதி போன்றவை செய்யப்பட்டுள்ளன.

### 3.8 ஹிந்தி வகுப்புகள்

குழந்தைகள் சிறுவயதிலேயே ஹிந்தி கற்றுக்கொள்ளும் பொருட்டு தொடர்ச்சியாக ஹிந்தி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள் பிராத்தமிக் தேர்வுகளில் பங்கேற்கின்றனர்.

### 3.9 கோடைகால வகுப்புகள் :

ஏப்ரல், மே மாத விடுமுறையில் பள்ளி மாணவர்களுக்கெனத் தனியாக யோகா வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

## 4.0 நோக்கங்கள் பத்து

ஐயப்ப சங்கம் பத்து முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இறைப்பணி மட்டும் அல்லாமல் பொது மக்களுக்காகச் சமூகப் பணிகளையும் செய்து வருகின்றது.

- ❖ பக்தர்களுக்குச் சேவை
- ❖ தூய்மையான பசுமைச் சூழல்
- ❖ அமைதியான சூழ்நிலை
- ❖ காலம் தவறாமை
- ❖ முறையான பூஜை வழிபாடுகள்
- ❖ ஒளிவு மறைவு இல்லாத நிர்வாகம்
- ❖ சரியான கணக்கு வழக்குகள்
- ❖ பக்தர்களுக்கு ஒழுக்கங்களை நினைவூட்டுதல்
- ❖ மாணவர்களுக்கு நல்ல நீதிநெறிகளைக் கற்பித்தல்
- ❖ எல்லோரையும் பாரபட்சமின்றி நடத்துதல்

பணம் பெரிதல்ல. பகவானின் மேல் உள்ள பக்தியும், அவனது அடியார்களுக்குச் செய்யும் சேவையுமே பெரிது என்ற நோக்கம் மிகச் சிறந்ததாக எண்ணப்படுகின்றது.

ஆன்மிகம், உடல்நலம், பொதுநலம் ஆகிய மூன்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன.


## 5.0 நிறைவுரை

ஒரு கோயில் பள்ளிக்கூடமாகத் திகழ வேண்டும். ஒரு பள்ளிக்கூடம் கோயிலாகத் திகழ வேண்டும் என்ற அடிப்படையில் இச்சங்கம் செயல்பட்டு வருகின்றது என்பது பொதுமக்களின் கருத்தாகும்.

| **6.0 சங்கத்தின் சமூகப்பணிகளின் தொகுப்பு** ( as on 17.11.2014 ) | | |
|---|---|---|
| 1. | நீர்மோர் தானம் ஆரம்பித்தது | 1991 |
| | ஒரு நாள் செலவு | ரூ. 6000 |
| | இதுவரை மொத்த செலவு | ரூ. 45,05,572 |
| 2. | கல்விதானம் ஆரம்பித்த ஆண்டு | 1994 |
| | இதுவரை உதவி பெற்ற ஏழை மாணவர்கள் | 984 |
| | உதவி அளித்த தொகை | ரூ. 44,15,000 |
| 3. | இரத்த தானம் ஆரம்பித்தது | 1996 |
| | இதுவரை இரத்ததானம் செய்தவர்கள் | 12,351 |
| | நம்முடைய இந்த அரிய தொடர் சாதனைக்காக இதுவரை அரசிடம் இருந்து பெற்ற விருதுகள் | 5 |
| 4. | யோகா வகுப்புகள் ஆரம்பித்த ஆண்டு | 1996 |
| | இதுவரை பயிற்சி பெற்றவர்கள் | 3620 |
| 5. | ஆன்மிக யாத்திரை ஆரம்பித்த ஆண்டு | 1999 |
| | இதுவரை சென்ற யாத்திரைகள் | 82 |
| | பயன் பெற்ற அன்பர்களின் எண்ணிக்கை | 3587 |
| 6. | தேவார வகுப்புகள் ஆரம்பித்த ஆண்டு | 2000 |
| | சராசரியாகப் பயிற்சி பெறுபவர்கள் | 50 |
| 7. | பாலர் பள்ளி ஆரம்பித்த ஆண்டு | 2007 |
| | பயிலும் மாணவர் சராசரி எண்ணிக்கை | 189 |
| 8. | கண்தானம் செய்ய ஊக்குவித்த ஆண்டு | 2009 |
| | இதுவரை தானம் செய்ய முன்வந்துள்ளவர்கள் | 2061 |
| 9. | உடல் உறுப்பு தானம் செய்ய ஊக்குவித்த ஆண்டு | 2009 |
| | இதுவரை தானம் செய்ய முன்வந்துள்ளவர்கள் | 1323 |
| 10. | உழவாரப்பணி ஆரம்பித்த ஆண்டு | 2012 |
| | ஒவ்வொரு வாரமும் பணி செய்பவர்கள் சராசரி | 80 |

| 7.0 நமது சங்கம் பற்றிய விவரங்களின் தொகுப்பு | | |
|---|---|---|
| 1. | ஐயப்ப சங்கம் துவங்கியது | 11.8.1977 |
| 2. | இடம் வாங்கியது | 1978, 1979 |
| 3. | இடம் கொடுத்தவர்கள் | அய்யம்பாளையம் பண்ணை |
| 4. | ஐயப்ப விக்கிரஹம் வடித்த ஆண்டு | 1985 |
| | வடித்த இடம் | நாகர்கோயில் |
| | வடித்தவர் பெயர் | பட்டனாச்சாரியார் |
| 5. | முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது ( ஐயப்பன், கணபதி, நாகராஜா, பகவதி ) | 27.6.1985 |
| 6. | தியான மண்டபம் கட்டியது | 1986 |
| 7. | மணிமண்டபம் கட்டியது | 1987 |
| 8. | துவஜஸ்தம்பம் கும்பாபிஷேகம் | 28.5.1988 |
| 9. | ஆலய கோபுரம் முதல் கும்பாபிஷேகம் | 13.12.1989 |
| 10. | நவக்கிரகம் அமைத்தது | 7.12.1993 |
| 11. | ரதபவனி துவக்கம் | 1993 |
| 12. | இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது | 13.12.1995 |
| 13. | நவக்கிரகம் எதிரில் உள்ள நாகராஜாக்கள் நிறுவப்பட்டது | 1998 |
| 14. | மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது | 9.12.2004 |
| 15. | புனிதக் கற்கள் மேடை அமைத்தது | 2006 |
| 16. | நான்காவது கும்பாபிஷேகம் | 15.12.2014 |
| 17. | இடம் வாங்கும்போதே அமைந்திருந்த சக்தி விநாயகர் ஆலயம் - ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மகா ஸ்வாமிகளால் கும்பாபிஷேகம் செய்யப் பெற்ற தேதி | 21.6.1962 |

## 8.0 KEY PLAN


N
Railway Junction
Gandhi Statue
To Palakkarai
Head Post Office
Mutharaiyar Statue
Williams Road
Tabs Complex
Child Jesus Hospital
Municipal Corporation Office
Campion School
Abirami Hotel
Cantonment Police Station
Bemwells Road
Central Bus Stand
Heber Road
KMC
Royal Road
Court
Bharathidasan Salai
Reynolds Road
MGR Statue
Vestry School
Thennur Anna Nagar
Lawsons Road
To Collector Office
Rama Maria
Sri Ayyappan Temple
Pudukkottai Palace
Hotel Sangam
Uyyakondan Canal
Maruthi Hospital
Pattabiraman Street
Puthur
KAPV Govt. Medical College Hospital



ஐயப்பன் ஆலயத்தின் முன்தோற்றம்

ஐயப்பன் ஆலயத்தின் முன்தோற்றம்